முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1168

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.12.2022, சனிக்கிழமை

1. தர்மசக்தியே அரங்கா வாழ்க
   தவபலம் கொண்ட தேசிகா வாழ்க
   பெருமை மிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக்குடில் படைத்த அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24 ம் நாள் 10.12.2022, சனிக்கிழமை)
   வரம்பெற்று உலகில் அற்புதம் நிகழ்த்த
   வடிவேலன் என் சூட்சுமமாக வந்த அரங்கனே
3. அரங்கனே உந்தனுக்கு அனுதினமும்
   ஆற்றலைக்கூட்டி ஆறுமுகன் யான்
   வரமாக பேரற்புதங்கள் நடத்தி வர
   வடிவேலன் என் துணையோடு அரங்கன் நீ
4. அரங்கன் நீ வந்த அவதார த்தின் நோக்கம்
   அற்புதமாய் நிறைவேறக்கூடும்
   வரங்கள் கூடி உன்வழி வரும் தொண்டர்கட்கும்
   வையகத்தில் அழியாமை உறுதியாகும்
5. ஆகவே அரங்கன் தர்மமும் சேவையும்
   அகிலத்தார்க்கு சர்வபலம் தரும் மார்க்கமாகும்
   வரமென இந்த மார்க்கத்தை வழிமொழிந்து உலகோர்
   வழிநடந்து தொடர்ந்து வருதல் காண
6. காணவே உலகோர்க்கு ஞான சித்தி
   கலி இடரையெல்லாம் வெல்லுகின்ற மகா சக்தி
   ஞானமாக அழியாமை என்கின்ற பேரற்புதமாக
   அனைவரும் கண்டு உலகினில் சிறக்க நேரும்
7. நேர்மைகொண்டு அரங்கனைத் தொடர்ந்து வருகின்ற
   நம்பிக்கை நிறைந்த சரணாகதி கொண்ட மக்களுக்கெல்லாம்
   முருகப்பெருமான் என் தயவாலே
   முழுமைபட இனிபிறவா பேறு உயர்கதியாய் கிட்டி வெற்றி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–